# வள்ளுவன் கூறும் தனிமனித வாழ்க்கை

ப. முர்ஷிதா ஸ்ரின்,
முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி.
murshitha5851@gmail.com

4

**ஆய்வுச் சுருக்கம் :**

மனிதர்கள் மகிழ்ச்சியாக வாழவே விரும்புகிறார்கள். துன்பத்தை யாரும் விரும்புவது இல்லை. உலகம் இன்பத்தின் இருப்பிடமா, துன்பத்தின் நிலைக்கலைங்களா என்று கேட்பின் அவரவர் விருப்பதிற்கு ஏற்ற விடைகளே கிடைக்கும். இவ்வுலகம் யாருக்கு இன்பத்தைக் கொடுக்கிறது. யாருக்கு துன்பத்தைக் கொடுக்கிறது என்று பல வழிகளில் ஆய்ந்து தெளிந்த வள்ளுவர் வாழ்க்கை நெறிகளை வகுத்த விதம் போற்றுதலுக்கு உரியது. பின்பற்றுவதற்கு ஏற்றது. வள்ளுவர் காட்டும் வாழ்வியல் நிலைகள் ஒவ்வொன்றும் உளவியல் கூறுகளை அடிப்படையாக கொண்டுள்ளன என்பதையும் அவற்றால் சிறந்த வழிமுறைகளான கல்வி, ஒழுக்கம், நன்றி போன்ற சில கருத்துக்கள் இக்கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ளன.

**முன்னுரை :**

தனிமனிதன் தன்னால் தழைக்கும்,
“ஒழுக்கம்” தூணாக உயர்வில் விளங்கி,
“கல்வி” ஒளியில் மனிதன் வளர்ச்சி பெருக்கு,
“நன்றி” சொல்லி நெஞ்சை இன்புறு,
அறம் வழி சென்று உயர்வை அடையும்.

என்ற இவ்வதிகாரங்கள் சிறப்பு எக்காலத்திற்கும், எந்நிலை மக்களுக்கும், பொருந்தும் வகையில் இயற்றப்பட்ட, திருக்குறளின் படைப்பாளரான, திருக்குறளை உலகத்திற்கு எடுத்துக்காட்டிய தெய்வப்புலவராக போற்றப்படும் திருவள்ளுவருக்கே உரியதாகும்.

ஆசிய மொழிகளில் ஆங்கிலம், கன்னடம், இந்தி, ஜப்பான், பிரெஞ்சு போன்ற பல

மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளன. உதாரணமாக, அதாவது 2014-ம் ஆண்டு கணக்கின் படி 82 மொழிகளில் மொழிப்பெயர்க்க பட்டுள்ளன. தமிழில் உள்ள நூல்களிலேயே சிறப்பிடம் பெற்ற நூல் திருக்குறள்.திருவள்ளுவர் வாழ்க்கை பற்றிய தத்துவங்களை திருக்குறளில் மிக அழகாகவும், ஆழமாகவும் வழங்கியுள்ளார். அவர் கூறிய கருத்துக்கள், மனித வாழ்க்கையின் சிறந்த வழிமுறைகளையும், ஒழுக்கமான வாழ்க்கையின் முக்கியத்துவத்தையும் பிரதிபலிக்கின்றன. அவற்றுள் சில கருத்துக்கள் பற்றி இக்கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ளது.

தனிமனித வாழ்க்கை

ஒழுக்கம் தான் நம் வாழ்க்கையை வழிநடத்தும் முதன்மை அதிகாரம், அதுவே சிறந்த நெறி மற்றும் வழிகாட்டி ஆகும். ஒழுக்கமானது ஒருவரின் செயல்களில், வார்த்தைகளில் மற்றும் நற்செயல் மட்டுமே மனிதனுக்கு உயர்வைத் தரும். ஒழுக்கமுடையவர்கள் தன் வாழ்வில் மேன்மை அடைவார்கள். அவ்வொழுக்கத்திலிருந்து தவறுபவர் பெரும் பழியினை அடைவார்.

“ஒருவன் வாழ்வில் உயர வேண்டுமென்றால் அவனுக்கு
கல்வியை விட ஒழுக்கமே சிறந்த
உயர்வினை கொடுக்கும்”.

உயர்ந்தவர்கள், அதாவது ஒழுக்கத்திலும், கல்வியிலும் சிறந்தவர்கள் ஏற்றுக் கொண்ட ஒழுக்கம் என்னும் பன்போடு வாழக் கற்காதவர்கள், பல நூல்களை படித்திருந்தாலும் அறிவில்லாதவர்களே ஆவர்.

**“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**

ஒழுக்கமானது பெரும் சிறப்பினை அளிக்கும் என்பதனால், அதனை உயிரை விடச் சிறந்ததாக போற்றப்பட வேண்டும்.துன்பத்திலும் ஒழுக்கம் காக்கப்பட வேண்டும். ஏனென்றால், எவ்வளவுதான் ஆராய்ந்து நோக்கினாலும் ஒழுக்கமே சிறந்த வாழ்க்கைத் துணையாக நிற்கின்றது. கற்றவன் கல்வியை மறந்தாலும், அதனை மீண்டும் கற்றுக்கொள்ள முடியும். ஆனால் வேதம் ஓதுபவன் பிறப்பால் உயர்வு ஒழுக்கம்

குன்றினால் கெடும். நல்லொழுக்கமானது என்றுமே நல்லின்பத்தை தரும். தீய ஒழுக்கமானது எந்த பிறவியிலும் துன்பத்தை கொடுக்கும். நல்ல ஒழுக்கம் உடையவர்கள் தவறியும் தான் வாயால் தீய வார்த்தைகளை கூறமாட்டார்கள்.

"பார்ப்பானுக்கு வேதம் ஓதுதலை விட
ஒழுக்கம் முக்கியம்"

என்பது சுப்ரமணிய பாரதியாரின் கருத்து. ஆகையால், ஒழுக்கமானது கல்வியினை விட சிறந்த ஒன்றாக கூறப்படுகிறது.

கல்வி

அறிவு தரும் கல்விக்கு ஆகும் செலவை விட அறியாமைக்கு ஆகும் செலவே அதிகம் ஆகும். கல்வி என்பது தெரியாததைச் தெரியச் செய்வதன்று;ஒழுக்கத்தை ஒழுக செய்வதேயாகும். கற்க வேண்டிய நூல்களை தெளிவாக கற்று, அந்நூல் நெறிப்படி வாழ்வது சிறந்தவையாகும்.

**"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக."**

கற்றவர்களே கண்ணுடையவர்கள் என்றும், கல்வியறிவு அற்றவர்கள் முகத்தில் இரண்டு புண் உடையவர்கள் என்றும் கூறப்படுகின்றனர். தோண்டத் தோண்ட மணற்கேணி நீரினைத் தருவது போல, நூல்களை கற்க கற்க அறிவானது வளரும். ஒரு பிறவியில் ஒருவன் கற்ற உயர்ந்த கல்வியானது இப்பிறவிக்கு மட்டுமின்றி ஏழு பிறவியிலும் உதவும் தன்மையினை உடையதாகும். ஒருவன் தான் கற்ற கல்வியினை மட்டுமே பிறரால் கவர்ந்து கொள்ள இயலாதது கல்விச் செல்வமே ஆகும். கற்றவனுக்கு எல்லா நாடும் சொந்த நாடாம். எல்லா ஊரும் சொந்த ஊராம். இதனைத் தெரிந்தும் ஒருவன் இறக்கும் வரை கூடப் படிக்காமல் இருப்பது ஏன்? என்று வள்ளுவர் கல்வி பற்றிய தான் கருத்தினை ஒரு அதிகாரத்தின் மூலம் நமக்கு விளக்கியுள்ளார்.

"மம்மர் அறுக்கும் மருந்து"

பிறருக்கு தருவதால் குறையாது. புகழை என்றும் பரவச் செய்யும். அறியாமையை போக்கும் மருந்து என நாலடியாரும் விளக்கியுள்ளார்.

ஆகையால் கல்வியின் அவசியத்தையும், சிறப்பினையும் உணர்ந்து கல்வியினை கற்றல் என்பது மிகவும் அவசியமானதாகும்.

நன்றி

செந்நன்றி என்பது நமக்கு உதவி செய்தவர்களை மறக்காமல் அவர்களுக்குப் பெரிதும் நன்றி உடையவர்களாக இருக்கும் உணர்வு ஆகும். இது பண்டைய காலத்திலிருந்து வரும் ஒரு சிறந்த மனப்பாங்காக அனைத்து மதங்களிலும், சமயங்களிலும் கூறப்படுகின்றது. இந்த மனப்பாங்கிணை பற்றி திருவள்ளுவர் எழுதிய திருக்குறளிலும், ஆங்கில தத்துவ ஞானி “ஆடம் ஸ்மித்” அவர்களும் விளக்கியுள்ளார்.

ஒருவன் தான் எந்த உதவியும் செய்யாத நிலையில், பிறர் தனக்கு செய்த உதவிக்கு இம்மண்ணுலகமும, விண்ணுலகமும் கொடுத்தாலும் ஈடாகாது. எந்தவொரு பயனையும் எதிர்ப்பார்க்காமல் ஒருவன் செய்த உதவியினை ஆராய்ந்து பார்த்தால், அவ்வுதவியின் நன்மை கடலைவிட பெரியதாகும். தினை அளவாக மிகச் சிறிய உதவியே செய்யப் பெற்றிருந்தாலும், உதவியின் பயனை அறிந்த சான்ற்றோர்களினால் அவ்வுதவியின் அளவு பனையளவு போற்றப்படும். தன்னுடைய துன்பத்தைப் போக்கியவரின் நட்பினை ஏழேழு பிறவியிலும் மறவாமல் போற்றுவர் பெரியோர்.

**“நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று”.**

ஒருவன் செய்த உதவியை மறப்பது என்பது நல்ல செயலாகாது. ஆனால் அவர் செய்த தீமையை உடனே மறப்பது நல்லதாகும். எந்த வகைப்பட்ட நன்மையினை மறந்தவர்க்கும், அதனிருந்தும் விடுபட வழியுண்டு. ஆனால் ஒருவன் தனக்கு செய்த நன்றியினை மறந்தவர்க்கு அதிலிருந்து விடுபட வழியில்லை. நன்றியின் இலக்கணத்தை பற்றி திருவள்ளுவர் தன்னுடைய செந் நன்றியறிதல் என்னும் அதிகாரத்தில் விரிவாகவும், விளக்கமாகவும் கூறியுள்ளார். இதனைப் போன்று ஔவையாரும் நன்றியினை பற்றி,

“நன்றி ஒருவர்க்கு செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கோல் என்ன வேண்டா – நின்று
தளரா வளர்த்தெங்கு........”.

என்று நன்றியினை பற்றி ஔவையார் தன் கருத்தினை கூறியுள்ளார்.

**முடிவுரை :**

எங்கெல்லாம், எப்படியெல்லாம் மானுட வாழ்வுகிடையே தர்மங்களை வலியுறுத்த முடியுமோ, அங்கெல்லாம், அப்படியெல்லாம் மானுட நீதிகளையும், தர்மங்களையும் வாழ்வியல் நெறிகளையும் வலியுறுத்துகிறது வள்ளுவம். மனித வாழ்வு, ஏற்றத்தாழ்வுகளை கொண்டதுதான். இன்பமுமு, துன்பமும் மாறி மாறி வருவது தான் வாழ்வு. எது வந்தாலும், எது நடந்தாலும் பழி மட்டும் வரக்கூடாது.

"ஆவியோடு காயம் அடியோடு போனாலும்
பாவி! என்ற நாமம் படையாதே"

என்றவர் முன்னோடி. வருந்தி அழைத்தாலும் கிடைக்காத பேறுகள் வரமாட்டா. வர வேண்டிய பேறுகளை வெறுத்து ஒதுக்கி நீக்கினாலும் அவை போகமாட்டா. இதையறியாது மக்கள் வாழ்ந்து வருவதனை அறிந்தும் மாற்றியமைக்கும் முயற்சியினை திருவள்ளுவர் மேற்கொண்டுள்ளார்.

எப்படியும் வாழலாம் என்று வாழும் உலக மக்களுக்கு இப்படி வாழ்ந்து பாருங்கள் உங்கள் வாழ்வு இன்பமானதாக,அமைதியானதாக,அகமும் புறமும் தூய்மையானதாக, அறம் செறிந்து ஒளிமிக்கதாக விளங்கும் என்னும் வரையறையைக் காட்டி நிற்பதுதான் வள்ளுவத்தின் வாழ்வியல் ஆகும். ஆகவே,

"வையகத்தில் உள்ளோர் வாழ்வாங்கு வாழ வேண்டுமாயின்" வள்ளுவர் கூறும் வாழ்வியலைப் போற்றி வாழ வேண்டும்.

**சான்றெண் விளக்கம் :**

1.கற்பக விநாயகர் பதிப்பகம்

2.திருக்குறள்.net.